தமிழ்

தாள்—I

(இலக்கியம்)

கால அளவு : மூன்று மணி நேரம்	மொத்த மதிப்பெண்கள் : 250

வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்கும் முன் பின்வரும் அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் கவனமாகப் படிக்கவும்:

இரண்டு பிரிவுகளாகப் பகுத்து மொத்தத்தில் எட்டு வினாக்கள் தரப்பட்டுள்ளன.

அவற்றுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

1, **5** ஆகிய வினாக்களுக்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்; எஞ்சிய வினாக்களுள் பகுதி ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவைத் தெரிவு செய்து விடையளிக்க வேண்டும். இரண்டு பகுதிகளிலும் சேர்த்து மொத்தத்தில் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க வேண்டும்.

ஒவ்வொரு வினா மற்றும் பகுதிகளுக்குரிய மதிப்பெண்கள் அவற்றுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ளன.

விடைகளைக் கட்டாயம் தமிழில் மட்டுமே எழுத வேண்டும்.

வினாக்களுக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள விடைதரும் சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசை முறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதி மட்டும் விடை எழுதப்பட்ட நிலையில் எஞ்சிய பகுதி அடிக்கப்படாமல் இருந்தால் அப்பகுதியிலிருக்கும் அடிக்கப்படாத பக்கமும் விடைப் பக்கமாகக் கருதிக் கணக்கிடப்படும். ஆகவே வினா-விடைப் புத்தகத்தில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதிகளைத் தெளிவாக அடித்துவிட வேண்டும்.

TAMIL

PAPER—I

(LITERATURE)

Time Allowed : Three Hours	Maximum Marks : 250

QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

Please read each of the following instructions carefully before attempting questions

There are EIGHT questions divided in two Sections.

Candidate has to attempt FIVE questions in all.

Question Nos. **1** and **5** are compulsory and out of the remaining, THREE are to be attempted choosing at least ONE question from each Sections.

The number of marks carried by a question/part is indicated against it.

Answers must be written in TAMIL.

Word limit in questions, wherever specified, should be adhered to.

Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

Optional Province · optionalprovince.com

SECTION—A

1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் *150* சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : 10×5=50

   (a) தமிழ் மொழியின் தனிச்சிறப்புகள்

   (b) தமிழில் வேற்றுமையுருபுகள்

   (c) சங்க இலக்கியங்களில் உலகப் பொதுமை

   (d) மணிமேகலை ஓர் அறக்காப்பியம்

   (e) சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு

2. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

   (a) தமிழ் வினைச் சொற்களின் அமைப்பு முறையினை ஆராய்க. 20

   (b) இலக்கியத் தமிழுக்கும் பேச்சுத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகளை ஆய்க. 15

   (c) இடைக்கால இலக்கியங்களின் மொழிநடையை ஆய்ந்துரைக்க. 15

3. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

   (a) அற இலக்கியங்களின் வளர்ச்சி நிலைகளை விரித்துரைக்க. 20

   (b) 'சிலப்பதிகாரம் சமய நல்லிணக்கக் காப்பியம்' என்பதை நிறுவுக. 15

   (c) அகத்திணை மாந்தர்கள் குறித்துக் கட்டுரை வரைக. 15

4. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

   (a) பக்தி இலக்கிய வளர்ச்சிக்குச் சமயக் குரவர்கள் ஆற்றிய பங்கினைத் தொகுத்துரைக்க. 20

   (b) 'குறவஞ்சி இலக்கியத்தில் நாட்டுப்புறக் கூறுகள்' எனும் பொருண்மையில் கட்டுரை வரைக. 15

   (c) தற்காலத் தமிழ்ச் சிறுகதைகள் சமூக மாற்றத்தை முன்னிறுத்துகின்றனவா? விரிவாக விளம்புக. 15

SECTION—B

5. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் குறிப்பு வரைக : 10×5=50

   (a) தமிழ் இலக்கியங்களில் உருவகம்

   (b) நவீனத் தமிழ் இலக்கியங்களில் அங்கதம்

   (c) தமிழில் கதைப் பாடல்கள்

   (d) தமிழில் பிறமொழி இலக்கியங்கள்

   (e) சங்க இலக்கியத்தில் சடங்குகளும் நம்பிக்கைகளும்

Optional Province · optionalprovince.com

6. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) வரலாற்றுமுறைத் திறனாய்வு அணுகுமுறையின் இன்றியமையாமையினை விளம்புக. 20

(b) 'நவீனத் தமிழ்க் கவிதைகளில் இருண்மை' கட்டுரைக்க. 15

(c) ஒப்பிலக்கியக் கொள்கையினை எடுத்துரைத்துத் தமிழ் இலக்கியத்துடன் பிறமொழி இலக்கியம் ஒன்றினை ஒப்பிடுக. 15

7. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) 'பழமொழிகள் பழந்தமிழரின் பண்பாட்டுக் கருவூலங்கள்' என்பதை நிறுவுக. 20

(b) மொழிபெயர்ப்பாளரின் தன்மைகளையும் மொழிபெயர்ப்பின் பயன்களையும் விவரிக்க. 15

(c) 'சமூக வளர்ச்சியும் இன்றைய இதழ்களும்' எனும் பொருண்மையில் கட்டுரை வரைக. 15

8. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 300 / 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :

(a) சங்கத் தமிழரின் போர் அறங்களை ஆராய்க. 20

(b) தமிழ் மொழிக்குச் சமணம் வழங்கிய கொடைகளை விரித்துரைக்க. 15

(c) சோழர்காலக் கலைக் கோட்பாடுகளை விவரிக்க. 15

★ ★ ★

Optional Province · optionalprovince.com